2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அ௲) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2021), மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள். உங்கள் உரையை அழகாக, சுருக்கமாகப் பதிவு செய்யுங்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு ஏற்கெனவே இருக்கின்ற மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுகளாக உள்ளதை 2 ஆண்டுகளாகக் குறைக்க வழிவகை செய்கிறது. 3 ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கும்போது மாவட்டங்களிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் முழுமைபெற ஏதுவாக இருக்கும். மேலும், திருக்கோயிலில் அதிகளவில் தன்னார்வலர்கள்மூலம் உதவிகள் பெற்று திருப்பணிகள் செய்ய ஏதுவாக இருக்கும். மேலும், முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய நல்லாட்சியில் அம்மா அரசால் நியமிக்கப்பட்ட குழு என்ற வகையில் இவர்களை மாற்றி புதிய உறுப்பினர்களை நியமனம் செய்யும் நோக்கில் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற சட்டமுன்வடிவைத் தொடர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 2–35

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் என்பது 2012 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, 2012*

@ 13-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பிறகு 2019 ஆம் ஆண்டு வரை 7 ஆண்டு காலம் இந்து சமய அறநிலையத் துறைக்கு எந்தவிதமான மாவட்டக் குழுக்களும் அமைக்கப்படவில்லை. அதன் பிறகு 2019 ஆம் ஆண்டு அவசர, அவசரமாக மாவட்டக் குழுக்களை அமைத்தார்கள். அதன் பிறகு அமைக்கப்பட்ட குழுக்கள் முழுமையாக அமைக்கப்பட்டதா என்றால் 27 மாவட்டங்களில்தான் அமைக்கப்பட்டன. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, அதில் 7 குழுக்களின் உறுப்பினர்கள் அவர்களாக முன்வந்து தங்கள் ராஜினாமா கடிதத்தைத் தந்திருக்கின்றார்கள். அப்படியென்றால், 11 உடன் 7 சேர்த்தால் 18 மாவட்டங்களுக்கு தற்போது மாவட்டக் குழுக்கள் இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு என்பது ஆன்மீகத்தில் ஒரு பொற்காலமாகத் திகழ்வதால் பலதரப்பட்ட மக்கள், அரசியலுக்கு அப்பாற்பட்டு, நன்கொடையாளர்கள், ஆன்மீகவாதிகள், அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற பெரியவர்களை ஒருங்கிணைத்து இந்தக் குழுக்களுக்கு நியமிக்க வேண்டுமென்று சட்டம் சொல்கிறது. இந்தச் சட்டத்தின்படி பார்த்தால், இந்தக் குழுக்களில் நியமிக்கப்படுபவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் தான் பதவிக்காலம் இருக்கின்றது. ஆனால், குழுக்களுக்கு 3 ஆண்டுகள் என்று பதவிக்காலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. யார் ஒருவர் அதிகாரத்தில் இருக்கின்றாரோ, அவர் அமைக்கின்ற குழுக்களுக்கு குறைந்த அளவு ஆண்டுகள்தான் பதவிக்காலம் இருக்க வேண்டும். ஆனால், அவர் கொடுக்கின்ற உத்தரவிற்கு 3 ஆண்டுகள் அதிகாரம் இருக்கின்றது. அதிகாரத்திலே இருப்பவர்களுக்கு 2 ஆண்டுகள் இருக்கின்றது. இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசியபோது இது ஆன்மீக பூமியாக மாறுவதால், நிறைய பேருக்கு, ஆன்மீகவாதிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதைச் சார்ந்து திருப்பணி செய்பவர்களுக்கு ஒரு நல்வாய்ப்பாக அமைய வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் 3 ஆண்டுகள் என இந்தச் சட்டத்தில் இருந்ததை இரண்டு ஆண்டுகளாகக் கொண்டு வருகிறோம். இதில் அரசியல் மனமாச்சரியங்கள் எதுவும் இல்லை. ஏற்கெனவே 18 மாவட்டக் குழுக்கள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. 2012 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 9 ஆண்டுகள் மாவட்டக் குழுக்களே அமைக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரைந்து நடைபெற வேண்டி திருப்பணிகள், அனைவருக்கும் வாய்ப்பு என்று கருதுவதால்தான்

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். முன்பு இருந்த மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர், நீங்கள் செய்யத் தவறிய பணிகளை செய்வதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற காரணத்தால் நீங்களும் இதை மீண்டும் ஒரு முறை எழுந்து ஆதரிக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஇ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2021), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை